**MCOP NO:2411/2023 DATE:09.08.2024**

ம.சா.1

பெயா்.செல்வராஜ்

த/பெ.திரு.ஆறுமுகம்

வயது. 68

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆம்புலன்சில் சென்ற போது விபத்து நடந்தது. நான் 50 அடியில் இருந்து குதித்ததால் என்னை ஆம்புலன்சில் ஏற்றி சென்றாா்கள் என்றால் ஆமாம். அவ்வாறு குதித்ததால் எனக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டது. நான் ஆம்புலன்சில் சென்ற போது நான் மட்டும் தான் சென்றேன். TN37U9852 என்ற ஆம்புலன்சில் சென்ற போது விபத்து நடந்தது. என்னுடன் ஆம்புலன்சில் நான்கு போ் ஓட்டுநரை சோ்த்து பயணம் செய்தாா்கள். அவா்கள் அனைவருக்கும் காயங்கள் ஏற்பட்டது. விபத்து நடந்த உடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு சென்னையில் உள்ள பம்மல் JIP மருத்துவமனையில் நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு அறுவை சிகிச்சை நடக்கவில்லை. எனக்கு 50 அடி உயரத்தில் இருந்து குதித்ததால் தான் காயங்கள் ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்களில் குறிப்பு உள்ளது என்றால் அதுபற்றி தொியாது. தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு வயது 69. அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விபத்தினால் காயங்கள் ஏற்படவில்லை என்றால் சாியல்ல. நான் 50 அடி உயரத்தில் இருந்து குதித்ததால் ஏற்பட்ட காயங்களையும் சோ்த்து இந்த வழக்கில் இழப்பிடு கேட்டு இருக்கிறேன் என்றால் சாியல்ல. எனக்கு தற்போது இயலாமை எதுவும் இல்லை என்றால் சாியல்ல. விபத்தினால் எனக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சாியல்ல. அதனால் 2ம் எதிா்மனுதாரா் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.